## துறையூர்நகராட்சி

2023-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 25.01.2023 புதன்கிழமை காலை 10.00 மணிக்கு நகராட்சி நகர் மன்ற கூட்ட அரங்கில் கீழ் கண்ட பொருள் மீது மேற்கொள்ளப்பட்ட அவசரக்கூட்டத்தின் நடவடிக்கைகள்

முன்னிலை:
நகர்மன்றத்தலைவர்
துறையூர்.

| மன்ற கூட்டம் நடை பெற்ற நாள் | | வரிசை எண் மற்றும் மன்ற கூட்ட பொருள் | மன்றத்தின் தீர்மானம் |
|---|---|---|---|
| 25.01.2023 | 01 | துறையூர் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் அனைத்து வார்டுகளிலும் உள்ள குடியிருப்புகள் மற்றும் வணிக நிறுவனங்களில் உருவாகும் குப்பைகளை மக்கும் மற்றும் மக்காத குப்பை என தரம் பிரித்து நகராட்சியின் நுண் உர செயலாக்க மையங்கள் (MCC) மற்றும் , பொருள் மீட்பு மையங்களில் (RRC) சேர்ப்பிக்கும் பணியினை ஒப்பந்த அடிப்படையில் தனியார் நிறுவனம் / ஒப்பந்ததாரர் மூலம் மூன்று ஆண்டு காலம் மேற்கொள்ள ஏதுவாக தினசரி உருவாகும் குப்பைகளின் அளவு அடிப்படையில் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.35295/2022/EA2 SWM நாள்.10.01.2023-ன்படி அனுமதி வழங்கப்பட்டுள்ளது. | தீர்மான எண்:349 அனுமதிக்க ப்பட்டது |

| நகராட்சி யின் பெயர் | தினசரி உற்பத்த யாகும் குப்பை யின் அளவு | ஒரு டன் குப்பையின் விலை விகிதம் (ரூபாயில்) | தினசரி அடிப்டையில் மதிப்பீட்டு தொகை ரூ.இலட்சத்தில் | வருடாந்திர அடிப்படை யில் மதிப்பீட்த் தொகை ரூ.இலட்சத் தில் | சரக்கு மற்றும் சேவை வரி 18% மற்றும் SWF 1% ரூ.இலட் சத்தில் | வருடாந்திர அடிப்படை யில் மொத்த மதிப்பீட்த் தொகை (ரூ.இலட்சத் தில்) |
|---|---|---|---|---|---|---|
| துறையூர் நகராட்சி | 13.81 | 5060.71 | 0.70 | 255.50 | 48.54 | 304.04 |

மேற்படி திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிகளை ஒப்பந்த அடிப்படையில் தனியார் நிறுவனம்/ ஒப்பந்ததாரர் மூன்று ஆண்டுகளுக்கான ஒப்பந்த புள்ளியை பெற்று ஓர் ஆண்டிற்கு பணி உத்தரவு வழங்கவும், தனியார் நிறுவனம்/ ஒப்பந்ததாரர் பணியின் தரம் மற்றும் செயல்பாட்டு திறன் அடிப்படையில் திருப்திகரமாக இருக்கும் பட்சத்தில் அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு ஒவ்வொரு ஆண்டாக நகர்மன்றத்தின் அனுமதி பெற்று ஒப்பந்த காலத்தை நீட்டித்து வழங்கவும், மேற்படி திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிக்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் நகராட்சி நிதி பற்றாக்குறை ஏற்படின் 15வது மத்திய நிதிக்குழு மான்யத்தின்(15th CFC SWM Tied Grant) நிதியினை பயன்படுத்திக்கொள்ளவும், ஒப்பந்தப்புள்ளி கோருவதற்காக நாளிதழ் விளம்பர செலவினத்தினை நகராட்சியின் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. **(ந.க.எண்.4244/2018/எச்1)**

**அலுவலக குறிப்பு**

அ) மன்றம் அனுமதிக்கலாம்

ஆ) மேற்கண்ட திடக்கழிவு மேலாண்மை திட்ட பணிக்கான முதலாம் ஆண்டு செலவினம் ரூ.304.04 இலட்சத்தினை இந்நகராட்சி பொது நிதி மற்றும் 15வது மத்திய நிதிக்குழு மானிய நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ஒம்/-இ.செல்வராணி
நகர்மன்றதலைவர்
துறையூர்நகராட்சி

/உண்மை நகல் /

ஆணையர்,
துறையூர்நகராட்சி